# எப்படி உருவானேன்!





உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com


காலை வணக்கம்
குழந்தைகளே! நலமா?
நான் யாரென்று
தெரிகிறதா?



வெள்ளை நிறத்தில்
மெத்மெத்தென்று
இருப்பேன். காலை
உணவுக்குச் சிறந்தவன்.



இட்லி...... மிகச்சரியாக
விழுங்கிவிட்டீர்கள்!!
இல்லை ,,, !!!! இல்லை!!
கூறிவிட்டீர்கள்!!












ஆமாம்! நான் இட்லி பேசுகிறேன்.

நானும் என் சகோதரன் தோசையும்

எப்படி உணவாகிறோம்

என்று தெரியுமா?








அரிசி, கறுப்பு உளுந்து அல்லது வெள்ளை உளுந்து, சிறிதளவு வெந்தயம் மூன்றையும் ஆறு மணி நேரம் முதல் எட்டு மணி நேரம் வரை தண்ணீரில் ஊற வைப்பர்.






நீரை வடிகட்டி அரிசியைக் கொரகொரப்பாக அரைக்க வேண்டும்.








உளுந்தம் பருப்புடன் வெந்தயம் சேர்த்து பஞ்சு போல அரைக்க வேண்டும்.




**இரண்டு மாவினையும்**
**உப்பு சேர்த்து நன்றாகக்**
**கலக்க வேண்டும்.**





பாத்திரத்தில் எட்டு மணி
நேரம் நொதிக்க வைத்தால்
இட்லி மாவு தயார்.







பின்னர் இட்லி பாத்திரத்தில் வேகவைத்து இட்லியாகவோ, தோசைக்கல்லில் ஊற்றி தோசையாகவோ சாப்பிடலாம்.



# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

**www.worldtamilacademy.com**



